# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 26வது கூட்டறிக்கை 2020.04.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 26வது அமர்வு 2020.04.09 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 26வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**தீர்மானம் - 04/26/01**

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம். ரீ பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நான் தற்போதய சூழ்நிலையைப் பற்றி விளக்கமாக பேச வேண்டிய தேவை இல்லை. நாட்டின் நிலமை எப்படி உள்ளது, நாளாந்தம் அதில் எப்படியான மாற்றங்கள் உருவாகின்றது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விடயம் ஆகும். நாம் எல்லோரும் அதை மதித்து அச்சப்பட்டு வாழ வேண்டிய ஒரு காலகட்டத்தில் இருக்கின்றோம். ஏப்ரல் மாத கூட்டத்தினை 9ம் திகதி நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்தோம். அதே போல் நடாத்துவதற்கு வழிவகுத்துத்தந்த இறைவனுக்கு நன்றி கூறியவனாக, இக்கால கட்டத்தில் சென்ற மாதம் சில உறுப்பினர்கள் என்னை சந்தித்து நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்று என்னை திணித்த போது நான் விரும்பாமலும் அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று செய்து கொண்டிருக்கின்ற போது உயர் மட்டங்களில் இருந்து அதைப்பற்றி நான் கூறிய விடயங்கள் மீண்டும் அழுத்தமாக சொல்லப்பட்டு சில விடயங்கள் நாம் செய்யக்கூடாது அல்லது இதை ஆழமாக சிந்தித்து செயற்பட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தது. இன்று உங்களுக்கு தெரியும் குறிப்பாக சபையின் செயலாளர் முஹம்மட் அவர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் றசாக் அவர்கள், சுகாதார ஊழியர்கள், சாரதிகள், ஏனைய தேவைப்படும் ஊழியர்கள் அனைவரும் அர்ப்பணிப்போடு அழைக்கப்பட்ட நேரங்களில் வருகை தந்து எமது சபையின் கடமைகளை தவறாமல் செய்து கொண்டு வருகின்றார்கள். இவ் ஊரின் சுகாதாரத்திற்கு நாம் பொறுப்பு. அப் பொறுப்பை சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும் அச் சேவைகள் நடந்து கொண்டு வருகின்றது. திண்மக் கழிவு பிரித்து எடுப்பதில் விடாப்பிடியாக செயற்படுத்தியதனால் எமது சேதனப் பசளை உற்பத்திகள் பல மடங்கு அதிகரித்து அதற்கு பெரிய கிராக்கி உள்ள நிலைக்கு வந்துள்ளது. இதற்கு உங்கள் சார்பில் எமது செயலாளருக்கும், அனைத்து ஊழியர்களுக்கும் நன்றி கூறியவனாக,

சென்ற மாதம் அசாதாரண சூழ்நிலையின் காரணமாக நிரந்தரமற்ற ஊழியர்கள் அனைவருக்கும் ரூபா 5000 முற்கொடுப்பனவாக வழங்கப்பட்டது. அப் பணத்தினை இம் மாதம் அறவிடவில்லை. எதிர்வருகின்ற மாதங்களில் அதனை அறவீடு செய்து அவர்களுக்கு பாரமாக இல்லாதவிதத்தில் செயற்படுத்துவதற்கு உங்களின் அங்கீகாரம் தேவை. அத்துடன் இக் கிழமையில் இருந்து திண்மக் கழிவு முகாமைத்துவம் செய்யும் சகல ஊழியர்களுக்கும் காலை உணவும், ஒவ்வொரு கிழமையும் 500/- பெறுமதியான மரக்கறிகள் வழங்கப்படுகின்றது. ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் அவர்கள் கடமையில் இருக்கின்றார்கள். இதனால் அவர்கள் செய்யும் சேவையை கௌரவித்து இச் செயற்பாட்டை செய்துள்ளோம். இச் சபையில் மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் ஒரு ஆக்கபூர்வமான கட்டுப்பாடு உள்ள சபையாக நடாத்த வேண்டுமானால் நமக்குள் ஒற்றுமை வேண்டும். முக்கியமாக நம்பிக்கை வேண்டும். உங்களது தலைமைத்துவத்தில் நீங்கள் நம்பிக்கை இழந்தால் இச் சபை ஒற்றுமையாக செல்ல முடியாது. அப்படியான ஒரு நிலை இச் சபைக்கு வரக்கூடாது. தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை சபை நடவடிக்கைகளில் திணிப்பதற்கு நாம் முயற்சிக்க கூடாது. வெளிப்படையாக நான் ஏதாவது பிழை செய்திருந்தால் அதனை என்னிடம் அறிவிக்கலாம். ஆனால் மறைமுகமாக கதைத்து மற்றவர்கள் என்னிடம் கூறும் விதத்தில் செயற்படுவது இச் சபையின் ஒற்றுமைக்கு ஒரு இழுக்கு.

இச் சபை மிகவும் கட்டுப்பாடாக எந்த ஒரு ஊழலும் அற்று செயற்படுகின்றது. சில விடயங்களில் நான் பிடிவாதமாக இருப்பது பொதுநலம் ஆகும். பொதுநலத்திற்கு எதிராக சுயநலம் செய்யமாட்டேன். இல்லாவிட்டால் இப்படியான சபை இருக்காது. தற்போது உங்களுக்கு சபையின் நிதி நிலமை தெரியும். பல சபைகள் சுகாதார நடவடிக்கைகள் செய்வதற்கு கூட பண வசதிகள் இல்லாமல் இருக்கின்றது. இச் சபையில் ஏறத்தாள 35 மில்லியன் பணம் இருக்கின்றது. அதில் 24 மில்லியன் வைப்பிற்குரியது. அதை எடுக்க இயலாது. ஏனையவர்களின் பணம் ஆகும். மீதமாக 11 மில்லியன் இருக்கின்றது. ஆனால் மாதாந்தம் எமது செலவுகளுக்கு கிட்டத்தட்ட 3.5 மில்லியன் தேவைப்படுகின்றது. ஆகக் குறைந்தது 94 தற்காலிக ஊழியர்கள் வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு சம்பளம் வழங்குவதில் 81% வீதம் செலவாகின்றது. நாம் செலவில் குறைக்க வேண்டும் என்றால் அவர்களில் சில ஊழியர்களை நிறுத்த வேண்டும் என்று சபை தீர்மானித்தால் அவர்களை நிறுத்தலாம். இனிவரும் 03 மாதங்களில் எந்த வருமானமும் எதிர்பார்க்க இயலாது. 04 வது மாதத்திற்கு இருக்கின்ற பணம் போதாது. 03 மாதம் வருமானம் இல்லை என்றால் கிட்டத்தட்ட 17 மில்லியன் வருமானம் இல்லை. நிதி முகாமைத்துவம் இல்லாவிட்டால் இச் சபையை கொண்டு செல்ல இயலாது. அரசியல் இலாபத்திற்கோ அல்லது என்னுடைய தனிப்பட்டதிற்கோ நான் எதுவும் செய்தது கிடையாது. எமது சபையாவது ஒழுங்கான நிறுவனமாக இவ் ஊரில் திகழ வேண்டும்.

Prime Minister அலுவலகத்தில் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. முஸ்லிம் பிரமுகர்களின் ஒரு குழு சேர்ந்து பிரதமருக்கு ஜனாசாக்களை அடக்கம் செய்வது தொடர்பான ஒரு அறிக்கையை கொடுத்தார்கள். அதில் அடக்கம் செய்யக்கூடிய தகுதி உள்ள இடங்களாக ஒரு இடம் சம்மாந்துறையில் சொல்லப்பட்டுள்ளது. பிரதேச சபை சட்டத்தின் படி அனைத்து மையவாடிகளும்,

மயானங்களும் பிரதேச சபையின் சொத்துக்கள் ஆகும். நான் மட்டும் முடிவெடுப்பதில்லை எல்லோருடனும் கலந்தாலோசித்து ஒரு முடிவை கூறுகின்றேன் என்று கூறிவிட்டு, நம்பிக்கையாளர் சபை, உலமா சபை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொறியியலாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், MOH எல்லோரும் இணைந்து ஒரு கலந்துரையாடல் செய்து இன்று காலையில் இதைப்பற்றி ஆலோசித்து அவர்கள் அனைவரும் பல கருத்துக்கள் கூறிவிட்டு தற்போதைய நிலையில் நிச்சயமாக அப்படி ஒரு தேவை வந்தால் நாம் எந்தவிதத்திலும் எதிர்க்க முடியாது எனக் கூறியுள்ளனர்.

இன்று உத்தியோகபூர்வமாக எமது உப தவிசாளர் அவரின் ஆசனத்தில் அமர்ந்திருக்கின்றார். அவரை உங்கள் எல்லோரின் சார்பிலும் வரவேற்றவனாக, இச் சபையின் அங்கீகார விடயங்கள் முடிந்தவுடன் அவருக்கு நான் உத்தியோகபூர்வமாக உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கொடுப்பேன். அதன் பின் கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

செலவுகளில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்பட்டால் அதனை கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சுகாதார சேவைகளின் கீழ் தற்காலிக ஊழியர்களின் சம்பளம் 1.3 மில்லியன் என்றும் வெளிப்புற திட்டமிடலின் கீழ் தற்காலிக ஊழியர்களின் சம்பளம் 1.1 மில்லியன் என்றும் இரண்டு பிரிவாக ஏன் பிரிக்கப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

சுகாதார சேவையின் கீழ் இருப்பது சுகாதாரத் தொழிலாளர்கள், வெளித்திட்டமிடலின் கீழ் இருப்பது வேலைத் தொழிலாளர்கள்.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

பொதுப்பயன்பாட்டு சேவையின் கீழ் மல்காம்பிட்டி தீகவாபி வீதி என்பதில் ரூபா 3021.60 உள்ளது. அதனை நெய்னாட்டு வீதி, மல்காம்பிட்டி வீதி என்று போடலாம். தற்போதய காலகட்டத்தில் அவ் வசனங்களை தவிர்த்துக் கொள்ளலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனை மாற்ற வேண்டும்.

**தீர்மானம் - 04/26/02**

சென்ற மாதம் 2020.03.01 தொடக்கம் 2020.03.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பொதுத்தேர்தலில் கௌரவ உறுப்பினர் மாஹிர், கௌரவ உறுப்பினர் அஸ்வர், கௌரவ உறுப்பினர் ஜெயச்சந்திரன் ஆகிய 03 கௌரவ உறுப்பினர்களும் வேட்பாளராக உள்ளார்கள். அவர்கள் தேர்தல் திணைக்களத்தின் விதிகளின் படி உத்தியோகபூர்வமாக விடுமுறை பெற்றவர்களாக கணிக்கப்படுவார்கள். அதனை சபைக்கு அறிவித்தவனாக, உங்கள் எல்லோருக்கும் தனிமைப்படுத்தல், நோய்த்தடுப்பு தொடர்பான கட்டளைச் சட்டம் அதி விசேட வர்த்தமானி அனுப்பப்பட்டது. Quarantine Act இற்கு கீழ் Authorized Officer என்பது தவிசாளர், MOH. உண்மையாக இவ் அரசாங்கம் பிரதேச சபைகளுக்கு ஒரு பங்கு தரவில்லை. ஏனைய சபைகளிடம் நீங்கள் கேட்டால் பிரதேச சபை தவிசாளர்கள் உள்வாங்கப்படவில்லை. சம்மாந்துறையின் சகல நடவடிக்கைகளிலும் சபையின் பங்களிப்பு இருக்கின்றது. உதாரணமாக ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள போது பொலிஸ், இராணுவம் எல்லோருக்கும் சபையால் தண்ணீர் போத்தல், குடிபானம் வழங்குகின்றோம். ஏனென்றால் அவர்கள் அர்ப்பணிப்போடு வேலை செய்கின்றார்கள்.

**தீர்மானம் - 04/26/03**
பொதுத் தேர்தல் 2020 இல் போட்டியிடும் 03 கௌரவ உறுப்பினர்களுக்கு லீவு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/26/04**
அரசாங்கத்தின் ''சௌபாக்கியா'' உணவு உற்பத்தித் திட்டத்தினை பிரதேச சபை சட்டத்தின் 19வது பிரிவின் 18வது பந்திக்கமைவாக கீழ்வரும் இடங்களில் செயற்படுத்துவதற்கான பிரேரணை.

1. சென்னல் கிராம மார்க்கட் வளவு
2. பண்ணைக்காணி
3. இஸ்மாயீல்புர சபைக் காணி
4. எலும்பு அரைக்கும் நிலையக் காணி
5. சென்னல் கிராம சனசமூக நிலையக் காணி
6. Garment Factory – Alayadi Vattai, Veeramunai

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/26/05**
ஊரடங்கு சட்ட வேளைகளில் திண்மக்கழிவகற்றல் மற்றும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு தினமும் காலை உணவு (50/-) மற்றும் மாதத்திற்கு இரு தடவை 500/- பெறுமதியான மரக்கறி பொதி வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் அஞ்சல் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன். அங்கு ஏனைய ஊர்களில் இருந்து மாத்திரை வழங்கும் பைகள் அழகான முறையில் பொதிகளில் வந்தது. ஆனால் எமது வைத்தியசாலையில் சென்று பார்த்தால் காகிதத்தில் சுற்றி வைத்து அனுப்பப்படுகின்றது. நான் வைத்திய அத்தியட்சகரிடம் இது எத்தனை தேவைப்படும், எவ்வளவு வரும் என்று கேட்டேன். அதற்கு அவர் அப் பைகளில் Print எடுப்பது என்றால் ஒரு பக்கட் இற்கு ஒரு ரூபா செலவாகும். ஒவ்வொரு மாதமும் 35000 பக்கட் தேவைப்படும் என்று கூறினார். எனவே இதனை பிரதேச சபையினால் பிரதேச சபையின் அன்பளிப்பு என்று Print பண்ணி 06 மாதத்திற்கு ஒரு தரம் செய்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**தீர்மானம் - 04/26/06**
சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அத்தியட்சகரின் தகவலுக்கமைய ஒரு மாதத்திற்கு சுமார் 35000 ''மாத்திரை வழங்கும் பைகள்'' தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நோயாளிகளுக்கு வழங்கப்படும் மாத்திரைகள் கடதாசியில் சுற்றப்பட்டு வழங்கப்படுகின்றது. இதனால் நோயாளிகளுக்கு ஏற்படும் சிரமத்தினைப் போக்க எமது சபையின் அனுசரனையுடன் ''மாத்திரை வழங்கும் பைகள்'' பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.எஸ்.சரீபா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/26/07**

ஜனாப் ஏ.ஜே.எம்.ஜெஸீல் (நிதி உதவியாளர்) மீளக் கடமையேற்றமையால் காசோலைகளுக்கு ஒப்பமிடுவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அனைத்து கௌரவ உறுப்பினர்களையும் விழித்தவனாகவும், இவ் இடத்தில் உங்களுக்காகவே நான் என்று கூறியவனாகவும், இவ் இடத்தில் நான் அமர்வதற்கு காரணமாக இருந்த எமது முன்னால் உப தவிசாளருக்கு முதலில் நன்றி செலுத்த வேண்டும். அவர் இப் பதவியை இராஜனாமா செய்ததன் காரணமாகத்தான் நான் இவ்விடத்தில் வரமுடிந்தது. ஒரு முறை என்னை சந்தித்து நான் உங்களுக்காகத்தான் இப் பதவியை இராஜினாமா செய்தேன். இவ் இடத்தில் வேறு ஒருவர் இருப்பதை என்னால் ஜீரணிக்க முடியாது என்று கூறினார். அதற்காக நான் அனைவரிடமும் தனிப்பட்ட முறையில் உதவி கோரியிருக்கின்றேன். அவ் உதவியை நீங்கள் மதித்திருக்கின்றீர்கள். நான் மரணிக்கும் வரை நான் இப்பதவியில் இருக்கலாம் அல்லது இல்லாமல் போகலாம். ஆனால் நான் உங்களுக்கு நன்றிக்கடன் உடையவனாக இருப்பேன் என்பதை இச் சபையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அதுமட்டுமல்லாமல் எனக்கு அதே பதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக இராஜனாமாவுடன் நிற்காமல் தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் இப் பதவியில் அமர்வதற்கு என்னைவிட பன்மடங்கு உழைத்தவர் எமது முன்னால் உப தவிசாளர் ஆவார். அவரை என்றென்றும் உடன் பிறவாத சகோதரனாக ஏற்றுக் கொண்டவனாக,

உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டும். அதாவது இக் கடிகாரத்தை பார்த்தால் கடிகாரத்தில் உள்ள சிறிய முள், பெரிய முள் போன்றதுதான் தவிசாளரும், உப தவிசாளரும் ஆகும். இக் கடிகாரத்தில் இருக்கின்ற முள் ஒரு பகல் வேளையில் 4 முறை ஒன்றாக சந்திக்கும். அது ஒன்றாக சந்தித்து ஒரே இடத்தில் நின்றால் அது நிற்பதாகத்தான் அர்த்தம். அது சுழன்றால் வேலை செய்வது என்று அர்த்தம். எனவே கௌரவ தவிசாளருடன் உள்ள தொடர்பு அப்படியாக இருக்குமே தவிர ஏனைய நேரம் சுழல்வதை நாடித்தான் இங்கு வேலை நடைபெறுகின்றது என்று கருத்திற்கொள்ள வேண்டும். இன்னுமொரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பாம்புகளிலே மிக உச்சமான பாம்பு நாகப்பாம்பு ஆகும். அப் பாம்பு படம் எடுத்து ஆடினால்தான் அப்பாம்புக்குரிய சக்தி இருக்கும். எனவே தலைமைத்துவத்தில் இருக்கின்ற தவிசாளர் அப் பதவிக்குரிய படத்தை எடுத்து அதன் உடம்பு போல பின்னால் வால் இருந்து படம் வரை உடம்பின் குறைச்சல் இல்லாமல் அவ் உடம்பு வீரியமாக இருந்தால் மட்டும் அப் பாம்பால் படம் எடுத்து ஆட முடியும். இதை பாம்பின் படத்தில் இருந்து வால் வரை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் இச் சபையில் ஏதோ ஒரு வகையில் மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய பிரதிநிதிகள் ஆகும். இச் சபையில் இரண்டை குறிப்பிடலாம் ஒன்று அரசு மற்றயது அரசாங்கம். அரசின் நிர்வாகத்தில் இருப்பவர்கள் பிழை செய்தால் அவர்கள் அதிகாரிகளுக்கு பதில் சொல்ல வேண்டியவர்களாக இருப்பார்கள். ஆனால் அரசாங்கத்தில் இருந்து மக்களால் தெரிவு செய்யப்பட்டு வந்த நாம் பிழைகள் செய்தால் மக்கள் எம்மிடம் கேள்வி கேட்பார்கள். இவ் இடத்தில் இருப்பதற்கு தகுதி பெற்றது மக்களின் செல்வாக்கை கொண்டு

ஆகும். எனவே நேரடியாக பதில் கூற வேண்டியவர்கள் இச் சபையில் இருக்கின்ற அனைத்து கௌரவ உறுப்பினர்கள் என்பதும், அவ் உறுப்பினர்கள் ஊடாக ஒவ்வொருவரும் பதில் சொல்லாமல் மொத்தமாக பதில் சொல்லக்கூடியவர் எங்களது கௌரவத்திற்குரிய தவிசாளர் அவர்கள். எனவே இவ் விடயத்தை நாம் அனைவரும் உணர்ந்தவர்களாகத்தான் இச் சபையை நடத்திக் கொண்டு செல்லலாம்.

இச் சபையை பொறுத்தவரையில் என்னோடு சேர்ந்து 16 கௌரவ உறுப்பினர்கள் வாக்களித்தார்கள். கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களுக்கு 03 உறுப்பினர்கள் வாக்களித்தார்கள். ஆனால் எந்தவொரு உறுப்பினரையும் எனக்கு வாக்களிக்காதவர்கள் என்னை தெரிவு செய்வார்கள் என்று எனது உள்ளத்தில் பகைமை இருந்தால் மறுமையில் என்னை சந்தித்து கேட்பீர்கள். எனக்கு எந்தப் பகையும் இல்லை. இங்கு அனைவரும் சமமானவர்கள். இது ஒரு பதவியாக ஏற்றுக் கொள்ளவில்லை. தவிசாளரைத் தவிர உறுப்பினர் என்ற எண்ணத்துடன் இருந்து செயற்படுவேன் என்பதை உறுதியாக சொல்கின்றேன். அவர்கள் மாற்றுக் கருத்து உடையவர்களே தவிர எதிராளியாக எந்த நேரத்திலும் நினைத்ததும் இல்லை, நினைக்கவும் கூடாது. ஒவ்வொருவரினதும் கையில் உள்ள விரல்கள் 5 உம் ஒன்றுபோல் இல்லாமல் இருக்கின்ற போது மற்றவர்கள் எம்மைப் போல் நமக்காக ஆதரவளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கவும் இயலாது. எனவே அவர்களும் இருக்கின்ற காலத்தில் சபையின் நல்ல நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதுதான் எனது அவா. நான் சம்மாந்துறையின் தொகுதி அமைப்பாளர் என்ற வகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் என்ற வகையிலும் என்னால் ஏதாவது செய்ய வேண்டும் என்றால் இச் சபைக்கு அப்பால் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் ஒரு ஊழியனாக கடமைப்பட்டிருக்கின்றேன் என்பதையும் கூற விரும்புகின்றேன்.

சபையை பொருத்தவரையில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வேண்டும், அதை தெளிவுபட எத்திவைக்க வேண்டும் என தலைவரின் உரையிலே கூறிவிட்டார். எனவே கருத்துக்களை சொல்வதற்கு தயங்காதீர்கள். நாம் ஏற்கனவே சபையின் ஊடாக ஏதாவது பொதி வழங்க வேண்டும் என்று அனைத்து உறுப்பினர்களும் விரும்பியவர்களாக இருந்தோம். நான் உங்களில் ஒருவனாக இருந்து எமது கௌரவ தவிசாளர் அவர்களிடம் முறையிட்ட போது அவர்கள் எனக்கு ஒரு கணக்கை காட்டினார்கள். அதன் பின்னர் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களும், கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களும் சேர்ந்து எங்களது கிராமத்தில் எந்த வகையிலும் இவ் உதவித்திட்டம் சென்றடையாதவர்களை இனங்கண்டு அவர்களுக்கு செல்ல வேண்டும் என்று 36 பேர் தெரிவு செய்தோம். நீங்கள் தயவு செய்து நான் இவ்விடயத்தில் உங்களுக்கு முயற்சி எடுக்கவில்லை என்று மனக்குறை கண்டுவிடாதீர்கள். நீங்கள் என்ன கருத்துக்களாக இருந்தாலும் கௌரவ தவிசாளர் அவர்களிடம் நேரடியாக கூற முடியாவிட்டால் என்னிடம் கூறுங்கள் நான் கௌரவ தவிசாளர் அவர்களிடம் கூறி உங்களுக்காக உழைப்பேன் என்றும் எல்லாம் வல்ல இறைவனையும் ஏனைய மதங்கள் பிரார்த்திக்கின்ற கடவுளையும் நேசித்தவனாக உங்களுக்கும் எனக்கும் இருக்கின்ற காலத்தில் தொடர்ந்து ஒற்றுமையாக இயங்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

நன்றி உப தவிசாளர் அவர்களே, மிக விரைவில் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெறுவார் என்று நினைக்கின்றேன். ஓய்வு பெற்றதும் நிச்சயமாக நிர்வாக நடவடிக்கைகளில் பெரும் பொறுப்பை நான் அவரிடம் பாரம் கொடுப்பதற்கு ஆவலாக காத்திருக்கின்றேன் என்று கூறி, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் எனக்கு ஒரு செய்தியை அனுப்பி இருந்தார். அது ஆக்கபூர்வமான விடயம் அதனை ஒரு முன்மொழிவாக செய்து சபையின் ஏகமனதான தீர்மானம் எடுப்பதற்கு முன்மொழியுங்கள் என்று அழைக்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, நாட்டின் அசாதாரண நிலை காரணமாக நேற்று என் காதால் கேட்ட விடயம் என்னவென்றால் அம்பாரை மாவட்டத்திலும் கொரோனா நோய் பரவியுள்ளது என்று, மன வேதனையோடும், ஏனைய மக்கள் சிரமப்படுவதையும் நினைத்து வேதனையோடும், துஆ பிரார்த்தனையோடும் ஆரம்பிக்கின்றேன். அல்லாஹ் இந்த கொரோனாவை இவ் உலகத்தில் இருந்தே வெளியேற்ற வேண்டும் என்று நாம் அனைவரும் பிரார்த்திக்க வேண்டும். சம்மாந்துறை மக்களை பாதுகாக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கின்றது. அம்பாரை மாவட்டத்தில் கொரானா இல்லாத போதுதான் இச் செய்தியை நான் அனுப்பியிருந்தேன். அந்த நேரம் நாம் நினைத்தோம் எங்களுடைய எல்லைகளை மூடி அதற்குள் நாம் பிரயாணம் செய்து, எமக்கு தேவையானவைகளை அதற்குள்ளே உற்பத்தி செய்து அதன் பயனை அடையலாம் என்ற

நோக்கத்தில் நான் தெரிவித்தேன். தற்போதய நிலையில் வெளிமாவட்டம் மட்டுமல்லாமல் வெளியூர் மக்களும் சம்மாந்துறைக்கு வரமுடியாத நிலையில் காணப்படுகின்றது. மீன் விற்பனை செய்யவோ, மரக்கறி விற்பனை செய்யவோ எவரும் எமது ஊருக்குள் வரக்கூடாது. நாம் அவர்களிடம் பொருட்கள் கொள்வனவு செய்வது என்றால் எமது எல்லையில் நின்று பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும். வெளியூர் மக்கள் உள்வருவதனை மிக வன்மையாக தடுக்க வேண்டும்.

ஜனாஸா விடயம் தொடர்பாக, முஸ்லிமான மக்களின் ஜனாஸாக்கள் தகனம் செய்யப்பட்டுள்ளது. நாம் தகனத்தை விரும்பக்கூடாது. எமது பாவங்களை அல்லாஹ் மன்னிக்க வேண்டும். இந்த ஜனாஸா எவ்வளவு அவதிப்பட்டது என்று எமக்கு தெரியாது. அல்லாஹ் தங்களையும் மன்னிக்க வேண்டும் என்று கேட்டு, வெளிமாவட்டத்தில் ஜனாஸா அடக்குவதற்கு இடம் இல்லை அல்லது ஜனாஸா அடக்கம் செய்யும் இடத்தில் நீரூற்று இருந்தால் அவ் ஜனாசாக்களை அடக்குவதற்கு நாம் அனுமதி கொடுத்து அடக்கம் செய்யலாம் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறியது போன்று முதலாவதாக ஊரடங்கு தளர்த்திய பின் நான் தொலைபேசி அழைப்பில் அம்பாரையில் இருந்து வியாபாரிகள் பொருட்கள் கொண்டுவருகின்றார்கள் அதை தடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அது எந்த வகையில் நடந்தது என்று தெரியாது. கொரோனா நோய் காரணமாக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தியது ஏனென்றால் மக்கள் வெளியிரங்கக் கூடாது என்று ஆனால் அதன் பாரதூரம் விளங்காமல் வெளியிறங்கிக் கொண்டிருக்கின்றார்கள். எமது வீட்டு வாசலில் கூட இருக்கக் கூடாது. ஏனென்றால் கிருமிகள் உயிர் வாழும் காலம் 14 மணித்தியாலயம் ஆகும். இது மனிதர்கள், மிருகங்களில் தங்கி வாழும். மனிதர்கள் வெளியே வராமல் இருந்தால் கிருமிகள் தானாகவே அழியக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. எனவே இவ் விடயத்தில் அனைவருக்கும் விழிப்புணர்வை ஊட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நாம் Mask வழங்குகின்றோம். ஆனால் அது துணியினால் தைத்துக் கொடுப்பதனால் மிகவும் இலகுவாக கிருமிகளை உள் எடுக்கும். ஏனென்றால் Medical Shop இல் வழங்கப்படுகின்ற Mask நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்கி வழங்கப்படுகின்றது. துணியால் வழங்கப்படும் Mask ஐ மீண்டும் மீண்டும் பாவிக்கின்றார்கள். Mask ஐ கழற்றுவதாக இருந்தால் உரிய முறைப்படி கீழ் இருந்து கழற்றி அதை எரிக்க வேண்டும். ஆனால் பாவிக்கப்பட்ட Mask கள் கண்ட கண்ட இடங்களில் வீசுகின்றார்கள். எமது வைத்தியசாலையில் கழிவகற்ற வந்த ஊழியர்கள் Mask ஐ கழற்றி வைத்து பின்னர் அதே கைகளால் போடுகின்றார்கள். நான் கேட்ட போது அதற்கு அவர்கள் எங்களுக்கு போதியளவு Mask தருவதில்லை என்று கூறினார்கள். தொழில்நுட்ப உத்தியோகத்தர் றசாக் அவர்களை தொடர்பு கொண்ட போது அவரது தொலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. ஆனால் சில விடயங்களை நாம் பாதுகாக்க வேண்டும் எம்மால் இந் நோய் பரவக்கூடாது. மக்களிடம் வெளியில் செல்ல வேண்டாம், சிறு பிள்ளைகளை எடுத்து செல்ல வேண்டாம் என்று ஆலோசனைகள் கூற வேண்டும். சுகாதாரம் என்பது நபி (ஸல்) அவர்கள் கொள்ளை நோய் ஏற்படும் இடத்திற்கு நீங்கள் செல்லவும் வேண்டாம், அவ் இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு செல்லவும் வேண்டாம், அதில் இருந்து பாதுகாப்பு பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறியிருக்கின்றார். எனவே நாம் எங்கு செல்வதாக இருந்தாலும் உங்களது பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுங்கள். அக்கரைப்பற்றில் ஏற்பட்டதை மிகவும் கண்டிக்கின்றேன். ஏனென்றால் அவர் ஒரு ஹாஜியார் அவருக்கு ஏற்பட்டது அல்லாஹ்வின் ஏற்பாடு. அதனை ஊடகங்களில் பகிரங்கப்படுத்தி அவரது வீட்டுப் பின்புறங்களையும், அக் குடும்பத்திற்கு அவமானத்தையும் அதே நேரம் தன் மன உளைச்சலில் ஏற்படக் கூடிய நிலமையினையும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இப்படியானது எமது ஊருக்கு வந்தால் யாருமே முன்போகக்கூடாது.

மையவாடி தொடர்பாக, ஜனாசாக்கள் எரிக்கப்படும் போது எல்லோரும் அழுதோம். ஏனென்றால் அந்த ஜனாசா எரிக்கப்படும் போது எவ்வளவு வேதனைப்படும். எனவே இவ் விடயத்தில் எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். சம்மாந்துறை மையவாடியில் இடம் கொடுப்பதில் எவ்வாறான எதிர்ப்புக்கள் வந்தாலும் நாம் அதை தடுக்க வேண்டும். எனவே ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கான இடத்தை வழங்க வேண்டும்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் கழிவகற்றும் இடத்தை துப்பரவு செய்து தந்தமைக்காக வைத்திய அத்தியட்சகர் Dr ஆசாத் அவர்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொண்டு, மீண்டும் கழிவகற்றல் பின்பக்கம் உள்ள காணிக்கு செல்ல இருப்பதால் அவ் இடத்தையும் சுத்தம்

செய்வதற்கு இவ் இயந்திரத்தை தந்து உதவுமாறும், அவ் இடத்திற்கு கழிவுகளை சேமிக்கும் ஒரு கட்டடத்தை வழங்க ஆவண செய்யுமாறும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உப தவிசாளரின் கருத்துக்கு மதிப்பளித்தவனாக, அவர்களுடைய உரையிலே பாவிக்கப்பட்ட ஒரு வசனம் உண்மையாக என்னை மன வேதனைக்கு உட்படுத்தியுள்ளது. ஏனென்றால் உப தவிசாளர் சபைக்கு வரவேண்டும் என்பதில் நான் உட்பட சகல உறுப்பினர்களும் பாரிய பங்களிப்பை செய்தவர்கள். இந்த இடத்தில் வேறு ஒருவர் இருக்க முடியாது என்ற வார்த்தை பிரயோகத்தை முன்னால் உப தவிசாளர் கூறியது அனைத்து உறுப்பினர்களையும் அவமதித்த ஒரு செயலாக இருக்கின்றது. இங்கு இருக்கின்ற யாரும் இச் சபையிலே உப தவிசாளராக வருவதற்கு தகுதியற்றவர்கள் அல்ல என்பதுதான் என்னுடைய தனிப்பட்ட கருத்தாக வெளியிடுகின்றேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, மாத்திரை வழங்குவதற்கான பொதியிற்கு எமது சபையின் ஊடாக அந் நிதியை செலுத்துவதாக இருந்தால் ரூபா 420000.00 வருடம் ஒன்றிற்கு செலவீடு செய்ய வேண்டும். இதனுடைய உத்தியோகபூர்வ சட்டம் என்ன இருக்கின்றது என்பது எனக்கு தெரியாது. ஆனால் இது தொடர்பான சுகாதார திணைக்களத்தின் ஊடாக ஏனைய வைத்தியசாலைகளில் மாத்திரைகள் பைகளில்தான் வழங்கப்படுகின்றது. இதற்கு இவர்களது சுகாதார திணைக்களத்தில் நிதி ஒதுக்கீடு இருக்கின்றதா? இல்லையா? என்பது எனக்கு சட்டபூர்வமாக தெரியாது. ஆனால் நாம் இது தொடர்பான திணைக்களங்களுக்கு சபை ஊடாக ஒரு அறிவித்தலாக அனுப்புவோம். வயது முதிர்ந்தவர்களுக்கு அவர்கள் எழுதுகின்ற அடையாளம் என்னவென்று விளங்காத நிலை இருக்கின்றது. இதை தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் இதற்கான முற்றுமுழுதான நிதியை ஒதுக்குவதா? என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, ventilator இன் பெறுமதி என்னவென்று எனக்கு தெரியாது. ஏனென்றால் அம்பாரை மாவட்டத்தில் எமது அண்மை ஊரில் இந் நோய் வந்துவிட்டது. எமது ஊரில் வரமாட்டாது என்று இருக்க இயலாது. எமது உள்ளூராட்சி ஆணையாளரின் அறிக்கை வராமல் இருந்திருந்தால் இச் சபையில் இருந்து ஒரு குறிப்பிட்ட நிதியை வாழ்வாதாரத்திற்காக எடுத்திருப்போம். அவ்வாறான ஒரு பங்களிப்பை செய்து இவ்வாறான முக்கியமான இயந்திரத்தினை கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தால் எமது சபையினால் ஒரு ஆலோசனையை கொண்டு வரவேண்டும். எமது சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற கிருமி நாசினி தற்போது எமது ஊரின் மத்தியிலே பொதுவாக ஒரு சில குறிப்பிட்ட இடங்களிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை எமது சம்மாந்துறையில் பரவலாக செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் கடந்த கிழமை சமுர்த்தி லாபிகளுக்கான கொடுப்பனவு, வறுமைக் கோட்டின் கீழ் காணப்படுகின்றவர்களுக்கான கொடுப்பனவு வழங்குவதற்காக தெரிவு செய்யப்படுகின்ற போது கிராம சேவகர்களின் காரியாலயம் பொதுச் சந்தையை விட மோசமாக இருந்தது. எனவே ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற கிராம சேவகர்களது அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள், மக்கள் கூடக்கூடிய இடங்களுக்கு முடியுமானவரை கிருமி நாசினிகளை தெளிப்பதற்கு முடிவெடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எங்கு செய்ய வேண்டும் என்ற முடிவுகளை MOH செய்கின்றது. தெளிக்கின்ற வேலைகளை அவர்கள் செய்கின்றார்கள். ஏனைய Support Service களை நாம் செய்கின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கூறிய விடயம் வெளியூரில் இருந்து வருபவர்கள் தொடர்பாக, நான் நேற்று இப் பணியை ஆரம்பித்துவிட்டேன். அதாவது ஒரு மீன் வியாபாரி ஒலுவிலில் இருந்து வந்தார். அவர் நிந்தவூர் அல்லிமுனை வீதியால் வந்து முதலாவதாக எனது வீட்டில் மீனை விற்பதற்கு முயற்சி செய்தார். நான் அவரிடம் pass இருக்கின்றதா என்று கேட்டேன். அவருக்கு Pass இல்லை. இந் நாட்டில் நடந்து கொண்டிருக்கின்ற சூழலில் இப்படியான வியாபாரம் செய்வது பிழை. உங்களுக்கு முகக்கவசம், கைக்கவசம் இல்லை. நீங்கள் விற்கவேண்டாம். என்னுடைய அனுமதியைத் தாண்டி இப் பிரதேசத்தில் மீன் விற்க இயலாது. நான் நினைத்தால் சட்டநடவடிக்கை மூலம் கைது செய்யலாம். அதை நான் விரும்பவில்லை. மீனை எடுத்து செல்லுங்கள் என்று கூறினேன். ஆனால் அவர் ஏற்றுக்கொள்வதாக இல்லை. என்ன தீமை ஏற்பட்டாலும், நன்மை ஏற்பட்டாலும் அதை நான் முன் நின்று செய்வேன் என்று எனது தற்துணிவிலே அவரை மல்காம்பிட்டி சந்தியிலே வைத்து திருப்பி அனுப்பினேன்.

இதில் என்ன வந்தாலும் பிரச்சினை இல்லை. எனவே இச் சேவையை எமது ஊரில் குறிப்பாக எமது பெண் கௌரவ உறுப்பினர்கள் சில சந்தர்ப்பத்தில் வெளிக்களத்திலே வேலை செய்ய இயலாத நிலை ஏற்பட்டாலும் நாம் செய்ய வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்கள் வரும் போது இச் சபையின் ஊடாக கௌரவ தவிசாளரினால் அனுமதியளிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் கட்டாயம் தேவையாகும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது கடந்த 4வது சபை அமர்வில் 2018.04.09 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்திலே சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட புளக் ஜே மேற்கு – 01 பிரிவில் சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவுக்கு சொந்தமான கட்டிடம் ஒன்று எந்தவிதமான பராமரிப்பு அற்று பாழடைந்த நிலையில் உள்ளது. அதனை அவர்கள் பராமரிக்க வேண்டும் அல்லது எமது சபையின் கீழ் தர வேண்டும் அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். அது தொடர்பாக இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்போது அக் கட்டடத்திலே அனாச்சாரமான செயல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. கொரோனா நோய்க்கு காரணமாக இருக்கின்ற வௌவால் அக் கட்டடத்திலே மிகக் கூடுதலாக காணப்படுகின்றது. ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கின்ற போது 03 Team காட்டீஸ் கூட்டம் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள். அதே போல் அதற்கு பக்கத்தில் இருக்கின்ற பிஸ்மில்லா பாலர் பாடசாலையிலும் இரவு பகலாக விளையாடுகின்றார்கள். எனவே அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வருகின்ற தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நான் நினைக்கின்றேன் அவர்களது பெருநாள் காலம் அடுத்த ஊரடங்கு சட்டம் உள்ளடக்கப்பட்ட நாட்களில் வருகின்றது. அவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக விசேட சேவை ஒன்றை ஏற்படுத்தி மல்வத்தை, வளத்தாப்பிட்டி, வீரமுனை போன்ற இடங்களில் தற்காலிக கிராமிய சந்தை ஒன்றை அவர்களுக்கு ஏற்பாடு செய்ய முடியுமாக இருந்தால் அதனை செய்ய வேண்டும். அத்துடன் ஜனாசா நல்லடக்கம் தொடர்பாக, மார்க்கத்தை முழுமையாக அறிந்தவன் அல்ல. இருப்பினும் என்னுடைய அறிவுக்கு எட்டிய வகையில் இறுதியாக இலங்கை ஜம்மியத்துல் உலமா தலைவர் அஷ்ஷைக் றிஸ்வி முப்தி அவர்களுடைய நேர்காணலை கேட்டிருந்தேன். அதில் அவர் இறுதியாக கூறிய விடயம் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்ய உங்களால் தரமுடியாவிட்டால் தகனம் செய்யும் சாம்பலையாவது தாருங்கள் என்றார் எனவே நல்லடக்கத்தினுடைய பெறுமதி எவ்வளவு இருக்கின்றது என்பதை அவர்களுடைய வார்த்தையில் இருந்து தெரிந்து கொண்டேன்.

ஆனால் சம்மாந்துறையை பொறுத்தவரைக்கும் தற்போதய காலநிலையில் அவர்களால் அடையாளம் காணப்பட்ட முஹல்லா மஹல்லா மையவாடியில் ஜனாசாக்களை நல்லடக்கம் செய்யலாம். ஆனால் மழை காலத்தில் அரசாங்கத்தினுடைய, சுகாதார திணைக்களத்தின் கணிப்பீட்டின் படி நீர் ஊற்று இருக்கின்ற இடங்களிலே நல்லடக்கம் செய்ய முடியாது என்ற காரணத்தை வைத்து அவர்கள் தகனம் செய்கின்றார்கள். இரண்டாவதாக தகனம் செய்யப்பட்ட ஜனாசாவை தகனம் செய்வதா? அல்லது நல்லடக்கம் செய்வதா? என்று நல்லடக்கம் செய்வதற்கு ஜாஎல மையவாடியில் கப்ர் வெட்டப்பட்டது. ஆனால் அங்கு ஜனாசாவை எந்த வகையில் கொண்டு செல்வது, எந்த வீதியால் கொண்டு செல்வது, மற்றவர்களுக்கு தொற்று ஆபத்து இல்லாத வகையில் கொண்டு செல்ல வேண்டும் என்ற பிரச்சினையால் இந்த ஜனாசா தகனம் செய்யப்பட்டது. எனவே கொழும்பில் இருந்து ஒரு ஜனாசாவை இங்கு கொண்டு வந்து நல்லடக்கம் செய்வது தொடர்பாக சிந்திக்க வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. ஆனால் ஜனாசாவை நல்லடக்கம் செய்வதற்கு எமது ஊர் சார்பாக ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்களுக்கு எனது உரையிலே ஏதாவது மனக்குறை இருந்தால் மன்னிப்பு கேட்டுக் கொள்கின்றேன். உப தவிசாளர் பதவிக்காக நான் எழுதிக் கொடுத்தேன். அதில் பல எதிர்ப்புக்கள வந்தது. எமது கட்சிகளின் தீர்மானப்படி ஒரு வருடத்தின் பின்னர் எனக்கு தருவதாக தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொருவர் இருக்க வேண்டும் என்று கூறினார்கள். கௌரவ உறுப்பினர் வளர்மதியின் இடத்தையும் பெற்றுக் கொள்கின்றேன். இரண்டு வருடத்திற்கு பின்னர் தராவிட்டால் வேண்டியதை செய்து கொள்ளுங்கள் என்று கூறிவிட்டு கௌரவமான முறையில் எமது கட்சிகளுக்கிடையே நடைபெற்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சொன்ன வார்த்தைக்கு கட்டுப்பட்டு அவர் அப் பதவியை இராஜினாமா செய்தார். எல்லோருக்கும் தகுதி இருக்கின்றது. நான் ஒவ்வொருவரையும் என்னைவிட மேலாக மதிக்கின்றேன். நீங்கள் தயவு செய்து அப்படியாக நினைக்காதீர்கள் என்று விணயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மிக முக்கியமாக கூற வேண்டிய விடயம் வெளியூரில் இருந்து பொருட்கள் வருவதாக கூறப்பட்டது. அவ் விடயம் தொடர்பாக, ஒரு Mechanism த்தை கண்டிப்பாக கவனத்தில் கொள்ள வேண்டும். மிக முக்கியமாக என்னுடைய ஆலோசனை என்னவென்றால் தொடர்ச்சியாக நாம் மக்கள் பிரதிநிதியாக இச் சபையிலே வந்து இருந்து Allowance எடுப்பதில் பிரயோசனமில்லை. அந்த அளவுக்கு நீங்களும் எங்களை பார்த்தீர்களானால் இன்றைக்கும் இச் சபையிலே அப் பதவியை இராஜனாமா செய்வதற்கும் தயாராக இருக்கின்றேன். இச் சபையில் நீங்கள் கூறுகின்றீர்கள் உங்களுடைய அடையாள அட்டை Pass ஆக இருக்கும் என்று, ஆனால் இவ் ஊர் தொடர்பாக எத்தனையோ கூட்டங்கள் நடைபெறுகின்றது. இதில் வர விரும்புபவர்கள் வருவார்கள், விருப்பம் இல்லாதவர்கள் தவிர்த்துக் கொள்வார்கள். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் மீன் விற்பனை செய்ய வந்தவரை தடுத்து திருப்பி அனுப்பப்பட்டது. அது அவரது தனிப்பட்ட செயலாகவும், சமூகத்தை நோக்கிய செயலாகவும் இருக்கின்றது. அவ்வாறு ஒவ்வொரு நாளும் வீதியில் நின்று கடமை செய்வதற்கு தயார்தான் இல்லை என்று சொல்லவில்லை. ஊர் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற விடயத்தில் நீங்கள் இச் சபைக்கு கௌரவ தவிசாளராக இருந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்களுக்கு அங்கீகாரம் இருக்கின்றது. கடந்த சபையிலும் நான் கூறியிருக்கின்றேன் இங்கு இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாமா? கருத்துக்கள் முன்வைக்கலாமா? என்று கலந்தாலோசித்த போது இச் சபை கடந்த 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டாலும், கதிரைகள் இட ஒதுக்கீடு இல்லாத பிரச்சினையின் காரணத்தினால் DCC கூட்டத்திற்கு அழைக்க இயலாத நிலை இருக்கின்றது என கூறப்பட்டது.

கௌரவ தவிசாளர் அவர்களே இவ் விடயத்தில் சபை உறுப்பினர்களையும் கௌரவப்படுத்த வேண்டும். நீங்கள் அதிகமான விடயங்களில் கௌரவப்படுத்துகின்றீர்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் பொது விடயங்களில் எங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுதான் இங்கு இருக்கின்ற உறுப்பினர்களின் ஏக்கமாக இருக்கின்றது. வெளியூரில் இருந்து பொருட்கள் கொண்டு வருகின்ற விடயத்தில் மிகவும் தெளிவானவர்களாக இருப்பவர்கள் சந்தைப் பணம் அறவிடுபவர்கள். அவர்கள் மூலமாக ஒரு Mechanism த்தையோ அல்லது எமது ஊருக்குள் வருவதற்கு 03 அல்லது 04 வழிகள் இருக்கின்றது. அவ் எல்லைகளில் வருபவர்களை தடுத்து சுகாதார முறைப்படி வருகின்றதா என்று பார்ப்பதற்கான வேலைத்திட்டங்களை MOH மூலமாகத்தான் செய்யலாம் என்று கூறினீர்கள் அதில் கவனம் எடுக்க வேண்டும்.

மையவாடி தொடர்பாக, சம்மாந்துறைக்கு முன்மாதிரியாக கௌரவ தவிசாளர் அவர்கள் கூறுவது போன்று அதில் வரக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள், ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகளை கண்டு கொண்டார்கள். நாம் எச் சந்தர்ப்பத்திலும் இரண்டாவது யோசனைக்கு இடம் கொடுக்காமல் உடனடியாக ஏகமனதான முடிவை தெரிவிக்க வேண்டும். நாட்டில் மிகத் தீவிரமான முறையில் கௌரவ ஜனாதிபதி அவர்களினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உலக சுகாதார அமைப்பே பெயர் குறிப்பிட்டு கதைக்கின்ற அளவுக்கு மிக நேர்த்தியான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கைக்கடக்கமான முறையில் கட்டுப்படுத்தப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. எமது ஊரையும், முழு நாட்டையும் இவ் உலகத்தில் இருந்து அதனைத் துரத்துவதற்கான காலம் மிக விரைவில் வரவேண்டும் என்று பிரார்த்தித்தவனாக,

அத்துடன் மிக முக்கியமான விடயம் சபைக்கு வந்தவுடன் சபையில் எமது ஊருக்கு தேவையான மிக முக்கியமான விடயங்கள், உறுப்பினர்களுக்கிடையிலான விடயங்கள் கதைக்கப்படுகின்றது. என்னுடைய தனிப்பட்ட கருத்து என்னவென்றால் இச் சபைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற நேரம் போதாமல் இருக்கின்றது. எனவே Allowance தவிர்ந்து வேறு மேலதிகமாக கூட்டம் வைத்தால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன். அத்துடன் Whatsapp Group ஆரம்பித்ததில் முதலாவது செய்தியாக போடபட்டது மிக முக்கியமான சபைக்குரிய விடயங்கைளை கதைக்க வேண்டும் என்று போடுபட்டது. ஆனால் இந்த கூட்டறிக்கை கூட இந்த Group இல் வருகின்றது. என்னுடைய கருத்து என்னவென்றால் இப்படி என்றால் நானும் 04 மணித்தியாலயம் கதைப்பதற்கு நேரம் கேட்க வேண்டி ஏற்படும். அத்துடன் கௌரவ தவிசாளர் அவர்களே, எனது வினயமான வேண்டுகோள் கௌரவ உறுப்பினர்களை எந்தளவுக்கு பயன்படுத்த வேண்டுமோ இச் சந்தர்ப்பத்தில் எல்லோரையும் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ். சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களுடைய கடிதங்கள் தற்போதய காலகட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் போது செயலாளர் அவர்கள் ஊழியர்களை அனுப்பி இக் கடிதங்களை கிடைக்க வைக்கின்றார். ஆனால் தற்போதய சூழ்நிலையில் எல்லோருக்கும் Whatsapp திறந்து அதில் அறிவித்தல் கொடுக்கலாம்.

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் எமது வைத்தியசாலையில் பக்கட் கொடுப்பது தொடர்பாக, வைத்தியசாலை அபிவிருத்திப் பணத்தினால் பைகள் கொள்வனவு செய்யப்பட்டு அதன் மூலமாக மாத்திரைகள் வழங்கப்பட்டது. தற்போதய சூழ்நிலையில் கிளினிக் இல் ஆட்களை கூட்ட வேண்டாம் என்று சம்மாந்துறை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் Dr ஆசாத் அவர்களின் முயற்சியினால் Ambulance ஊடாக மாத்திரைகள் வழங்கப்படுகின்றது. போதிய பக்கட் இல்லாததனால் காகிதத்தில் வைத்து கொடுக்கின்றார்கள். நீங்கள் வருடத்திற்கு கொடுக்காவிட்டாலும் 03 மாதத்திற்காவது வழங்க வேண்டும் என்பதை எல்லோர் சார்பிலும் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தயவு செய்து அங்கத்தவர்கள் கருத்துக்கள் கூறும் போது மாற்றுக் கருத்துக்களை உருவாக்கி விவாதம் உருவாக்க வேண்டாம். அக் கருத்துக்களை உள்வாங்கி தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பை என்னிடம் தந்துள்ளீர்கள். அவர் அவரின் கருத்தை கூறினார். தவிசாளரின் அனுமதி இல்லாமல் எந்த ஒரு அங்கத்தவரும் உரையாற்ற முடியாது. கௌரவ உறுப்பினர்கள் அனைவரும் உள்வாங்கப்பட வேண்டும் என்று ஆரம்பத்தில் இருந்து போராடி வருவது நான். ஆனால் தீர்மானம் எடுக்கும் சக்தி என்னிடம் இல்லை. DCC இற்கு முதல் கூட்டத்தில் பிடிவாதமாக உறுப்பினர்கள் வரவேண்டும், இவ்விடத்தில்தான் இருக்க வேண்டும் என்று வாதிட்டவன். ஆனால் துரதிஸ்டவசமாக தேசிய மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அடையாள அட்டை தொடர்பாக, அத்தியாவசிய வேலைகளில் இதனை பயன்படுத்துவதற்கு Gazatte பண்ணப்பட்டுள்ளது. இது ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாவிப்பதற்கு நீடிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் சில சிக்கல்கள் வரலாம். Curfew Pass கொடுப்பதற்கான அங்கீகாரம் பொலிஸ் இற்கு மாத்திரம் உள்ளது. அது தேவைப்பட்டால் இராணுவ அதிகாரியுடன் கதைத்து அதனை செய்ய வேண்டும்.

வெளியூரில் இருந்து வருகின்ற வியாபாரிகள் தொடர்பாக, Covid – 19 செயற்குழு செய்யும் பொறுப்பு MOH, பொலிஸ், DS இற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குள் நாமும் இருந்து சில விடயங்களை செய்கின்ற போது முதல் கிழமை அம்பாரையில் இருந்து வருகின்ற பெரும்பான்மை மக்களுக்கு முக்கியமான இடங்களில் பொலிஸ் பாதுகாப்பாக இடம் ஒதுக்கி கொடுக்கின்றார்கள். அவ்வாறு வருவது என்றால் MOH இன் Certificate உடன் வர வேண்டும் என்ற கருத்தை கொண்டு வந்தோம். அதன் பின்னர் சென்ற கிழமை அல் மர்ஜான் பாடசாலைக்கு அப்பால் அன்றாட நடைபாதை வியாபாரிகள் வியாபாரம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தோம். இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் இனரீதியான பிரச்சினைகள் ஏற்படுகின்றது. பாதுகாப்பு படையில் பெரும்பான்மை சிங்கள உத்தியோகத்தர்கள். அம்பாரையில் இருந்து வந்தால் சுகாதார ரீதியில் அம்பாரை MOH இடம் இருந்து Clearance, Mask போட வேண்டும் என்று சொல்லுகின்றோம். சில விடயங்கள் சந்தர்ப்ப சூழ்நிலை திணிக்கும். எப்போதும் உங்களுக்கு மறைத்து நான் எதுவும் செய்ய வேண்டியதில்லை.

நீங்கள் சில நேரம் எங்களை மதிக்கின்றார் இல்லை என்று நினைக்கின்றீர்கள். ஆனால் உங்களை மதிக்காமல் அவ் அதிகாரம் வராது. நாளாந்தம் நான் அலுவலகத்திற்கு வருகின்றேன். உங்களையும் வர சொல்லலாம் ஆனால் நான் உங்களது பாதுகாப்புக்கு உதவுவது இல்லை. இதில் பிரச்சினை என்னவென்றால் இம் முயற்சியில் நமக்கு சட்டத்தில் அதிகாரம் இருந்தாலும் அரசாங்க நடவடிக்கைகளில் இடம் இல்லை. நீங்கள் விளங்க வேண்டும் இச் சபையின் வெற்றி நாம் உத்தியோகத்தர்களை மதித்து நடப்பதால்தான், இச் சபையின் வேலைகள் ஒழுங்காக செல்கின்றது. தயவு செய்து நான் உங்களை கௌரவிக்கவில்லை என்று ஒரு எண்ணம் வைக்காதீர்கள். இக் கால கட்டத்தில் பொறுமையாக இருங்கள் இன்சா அல்லாஹ் இக் கதிரையை நீங்கள் எல்லோரும் அலங்கரிக்கக்கூடியவர்கள். நிச்சயமாக சந்தர்ப்பம் வரும். தயவு செய்து நான் உங்களை மதிக்கவில்லை என்ற கருத்தை போக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு வந்தவர்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ் உலகத்தில் ஏற்பட்டிருக்கின்ற கொரோனா தொற்று நோய் எமது நாட்டிலும் ஏற்பட்டிருக்கின்றது. எமது நாட்டின் அதி உத்தம ஜனாதிபதி அவர்களின் கடமை உணர்ச்சியின் காரணமாக நாட்டிற்கான நோயின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி நிர்வாகத்தை மேற்கொண்டமைக்காக இச் சபை சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். இக் காலகட்டத்தில் நான் அக்கரைப்பற்று அஞ்சல் அதிபராக கடமைபுரிகின்றேன். இதுவரையில் ஒவ்வொருநாளும் Covid 19 சட்டதிட்டத்தில் அஞசல் திணைக்களமும் கட்டுப்பட்டுள்ளது. இதனால் அதற்குரிய மனிதாபிமான நடவடிக்கைகளை அஞ்சல் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. அக்கரைப்பற்று 2ம் குறிச்சியில் ஏற்பட்ட Covid 19 பிரச்சினையினால் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அதற்குரிய நபரை இனங்கண்டு அதற்கான முகாமிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தற்போது அப் பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இங்கு நான் சபையில் இருக்கும் போது எனக்கு தற்போது பிரதி அஞ்சல்மா அதிபருக்கு அம்பாரை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தொலைபேசி அழைப்பு வந்த போது இன்று கடமையில் இருக்கின்ற நான் எனது உயிர்களுக்கு பயந்து இன்று கடமைக்கு வர முடியாது என்று கூறிய படியினால் அக்கரைப்பற்று வைத்திய அத்தியட்சகரின் வேண்டுகோளிற்கு இணங்க இக்காலகட்டத்தில் எங்களது மனிதாபிமான சேவைகளை எமது திணைக்களம் மேற்கொள்கின்றது. அதன் அடிப்படையில் நான் இன்று மிகவும் முக்கியமான நிலையில் இந் நாட்டில் இருக்கின்ற Covid 19 திட்டத்தை செயற்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.

அத்துடன் அடையாள அட்டை தொடர்பாக பேசப்பட்டது. அடையாள அட்டை வழங்குவது என்பது பொலிஸ், PHI, DS போன்றவர்கள் Authorized Officer வேறு யாருமில்லை. ஏனென்றால் எனக்கு கீழ் இருக்கின்றவர்களுக்கு எடுக்கப்பட்ட அனுமதி அட்டையில் அக்கரைப்பற்று OIC மூலமாக அனுமதி பெற்றுக் கொண்டேன். வெளியூரில் இருந்து இங்கு வருபவர்களுக்கு வெளியூரில் இருக்கின்ற PHI இவர்களுக்கு தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தி Certificate வழங்கப்படுகின்றவர்கள் மாத்திரம்தான் எமது ஊரில் வியாபாரம் செய்ய வேண்டும். எனவே நாம் எமது ஊரின் பாதுகாப்பிற்காக முன் ஏற்பாட்டு நடவடிக்கைகளை மிகத்தீவிரமாக மேற்கொண்டு செய்ய வேண்டும். ஏனென்றால் சுகாதாரம் பிரதேச சபையின் முக்கிய செயற்பாடாக இருக்கின்றது. இன்று மக்களின் பிரதிநிதிகளாக கௌரவ தவிசாளர் அவர்களும், கௌரவ உறுப்பினர்களும் இருக்கின்ற படியால் நாம் அதற்கு முக்கியத்துவம் வழங்கி இச் செயற்திட்டத்தில் நாம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியது போல் அவர்களுடைய கிராமத்தில் வறியவர்களுக்கான பணம் கொடுப்பதற்கான ஆட்கள் தெரிவிற்கு அதிகமான மக்கள் கூட்டமாக நின்றார்கள் என்று, ஆனால் பிரதேச செயலகத்தில் அதற்குரிய வட்டார உறுப்பினரும், GS, சமுர்த்தி உத்தியோகத்தர் இவர்கள் மட்டும் அக் குழுவை தயார்படுத்தி அதன் பின்னர் GS ஒவ்வொரு வீடாக சென்று அப் பணத்தை வழங்க வேண்டும். 05 பேருக்கு மேற்பட்டால் MOH அலுவலகத்திற்கோ அல்லது DS இற்கோ அறிவித்தல் கொடுத்தால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பார்கள். நாம் மக்கள் பிரதிநிதி மக்களுக்கு எந்த நோயும் வரக்கூடாது என்பதுதான் உண்மையான நோக்கம். எனவே சனநெருக்கடி இருந்தால் அதை கட்டாயமாக தெரிவிக்க வேண்டும். அதே நேரம் சென்ற சபையிலும் மற்றவர்களின் வட்டாரத்தில் தலையிட வேண்டாம் என்று கூறி இருந்தும் கூட நான் கூறியது என்னவென்றால் என்னால் பிழை தெரிந்தால் அதை சுட்டிக்காட்ட வேண்டும். எனக்கு அந்த நேரம் கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்களது வட்டாரமாக இருந்தாலும் அவரிடம் தொலைபேசி அழைப்பில் கதைத்து விடயத்தை விளங்கப்படுத்தலாம். அவ் வட்டாரத்தில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களை கூட்டமாக வைத்து முதியோர் பணத்தை வழங்கனார்கள். அதை நான் உடனடியாக GS இடம் கதைத்து அவ் அலுவலகத்தை மூட வைத்து அந்த GS ஒவ்வொரு வீடு வீடாக சென்று அப் பணத்தை வழங்கினார். எனவே இப்படியான வேலைகளை எம்மாலும் செய்ய முடியும்.

கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் கூறியது இக் கூட்டறிக்கை அனுப்பிய நோக்கம் என்னவென்றால் எமது உறுப்பினர்களையும், வேலை செய்கின்ற ஊழியர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆகும். அவர்கள் இதை எடுத்து வீட்டுக்கு வர தேவையில்லை. இதை Scan செய்து PDF மூலமாக Whatsapp Group இல் அனுப்பலாம் என்ற முன்உதாரணத்திற்கு அனுப்பியதே தவிர எல்லோருக்கும் தெரிய வேண்டிய நோக்கத்தில் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் உறுப்பினர்களுடன் இணைந்து கௌரவ தவிசாளர் உட்பட ஒரு கூட்டம் கூடிய போது எமது ஊரில் உள்ள மக்களுக்கு உலர் உணவுப் பொதி எமது சபையூடாக கொடுக்க வேண்டும் என்று முடிவு எடுத்ததில் நான் கடுமையாக இருந்தேன். ஆனால் அதனை கொடுக்க இயலாது என்று எமது எல்லோருக்கு ஆதாரம் அனுப்பப்பட்டது. ஆனால் என்னுடைய கருத்து என்னவென்றால் இலவசமாக அப் பொதியை வழங்க இயலாத சந்தர்ப்பத்தில் எமது Deposite இல் இருக்கின்ற பணத்தை எடுத்து ஏன் மக்களுக்கு மானிய அடிப்படையில் வழங்கி அதில் வருகின்ற பணத்தை மீண்டும் வைப்பு செய்ய இயலாது என்பது என்னுடைய கருத்து ஆகும். கொரோனா நோயினால் பாதிக்கப்பட்ட ஜனாசாக்களை அடக்கம் செய்ய இயலாது என்று 02 ஜனாசாக்களை தகனம் செய்துள்ளார்கள் அது மன வெதனைக்குரிய விடயம் ஆகும். கௌரவ பிரதம மந்திரி அவர்கள் எமது ஊரில் ஒரு இடத்தை கேட்டிருக்கின்ற போது நாம் எல்லோரும் ஏகமனதாக தீர்மானித்து அவ் இடத்தை கொடுப்பதற்கு என்னுடைய கருத்தை தெரிவிக்கின்றேன். ஊரடங்கு சட்டம் உள்ள போது 10 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் வீதிகளில் இருக்கின்றார்கள். எனக்கு மிகவும் வேதனையாக இருக்கின்றது. வீடு வீடாக சென்று சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனவே எம்மால் இயன்றளவுக்கு விழிப்புணர்வுகளை செய்ய வேண்டும். நோயின் தாக்கம் என்ன என்று தெரியாமல் இருக்கின்றார்கள். எமது அண்மை ஊரான அக்கரைப்பற்றில் வந்துவிட்டது. எனவே பாதுகாப்பான முறையில் வீட்டோடு இருந்து எமது வேலைகளை செய்ய வேண்டும் என்று கூறி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம் - 04/26/08**

COVID 19 வைரஸினால் உயிரிழக்கும் ஜனாசாக்களை அவசியத் தேவை ஏற்படும் போது எமது ஊரில் முஹல்லா மஹல்லா மையவாடி அல்லது பொருத்தமான மையவாடியில் அடக்கம் செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் கே.எம். இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அடையாள அட்டை தொடர்பாக பேசினார்கள், உண்மையிலே அது காலத்தின் கட்டாயமாக இருக்கின்றது. சில இராணுவத்தினர்களுக்கு அது தொடர்பாக தெரியாமல் இருக்கின்றது. எங்களை நாங்கள் அடையாளப்படுத்துவதற்காக ஒரு Uniform தந்தால் இந்த அபாயகரமான காலத்தில் நாங்கள் பாவிக்கின்ற போது எங்களை மதித்துக் கொள்வார்கள். எனவே எல்லா உறுப்பினர்களுக்கும் இதை செய்தால் சிறப்பாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்த சாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முன்னால் உப தவிசாளர் ஒரு கோரிக்கையை முன்வைக்க சொன்னார். அதாவது வளத்தாப்பிட்டியில் உள்ள மக்களை மல்வத்தை ஊடாக சம்மாந்துறைக்கு பொருட்கள் வாங்குவதற்கு விடாமல் இராணுவத்தினர் தடுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவர்களுக்கு தேவையான பொருட்களை உடனடியாக அனுப்பலாம் என்று கூறி, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

*2020.04.09 Sammanthurai Pradeshiya Sabha -04/26*

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

*2020.04.09 Sammanthurai Pradeshiya Sabha -04/26*

***2020.04.09 Sammanthurai Pradeshiya Sabha -04/26***

***2020.04.09 Sammanthurai Pradeshiya Sabha -04/26***

*2020.04.09 Sammanthurai  Pradeshiya Sabha -04/26*